மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றம், சத்தியமங்கலம்

<u>அசல் வழக்கு எண்.8/2017</u>

2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் நாள் வா.சா.1 சாட்சி என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுவர், 1983-ம் ஆண்டு 54-வது சட்டப்பிரிவு 6(2) ஏற்பாட்டின் படி திருமதி.கே.ரேணுகாதேவி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அமரன் | வயது | : 61 |
| த/பெ | : சுப்பிரமணியம் | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலூக்கா | : | தொழில் | : |

<u>முதல் விசாரணை தொடர்ச்சி:-</u>

வா.சா.1 ஆகிய நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பு கூடுதல் முதல் விசாரணை ஆணை உறுதி நிருபணமாகிய வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். மேலும் எனது தரப்பு ஆவணமாக இ.ம.எண்.3/2022-ன் மூலம் எனது தரப்பில் கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.175/2000 உண்டான வழக்கு பதிவேட்டின் கோப்பு **வா.சா.ஆ.11**. இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். பதிவு பெற்ற அ.வ.எண்.276/2000 -க்கான அசல் வழக்கு பதிவேட்டின் கோப்பு சான்று நகல் **வா.சா.ஆ.12**. கடந்த 17.10.2012-ம் தேதி துணை வட்டாட்சியர் சத்தியமங்கலம் அமைதி பேச்சு வார்த்தைக்காக கொடுத்த குறிப்பாணை **வா.சா.ஆ.13**. 14.10.1980-ம் தேதி நக.எண்.5564/80-அ 2-ன் படி ஈரோடு, இந்து அறநிலையத் துறை, ஆட்சித் துறை உதவி ஆணையாளர் அலுவலருக்கு அனுப்பிய கடிதம் அசல் **வா.சா.ஆ.14**. வீட்டு வரி ரசீதுகள் 2 எண்ணிக்கை அசல் **வா.சா.ஆ.15**. மின் கட்டண ரசீதுகள் 13 எண்ணிக்கை **வா.சா.அ.16**.(வா.சா.ஆ.11 முதல் வா.சா.அ.16 வரையிலான ஆவணங்களை பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd)அமரன்